உ

சண்முகநாதன்.

SANMUKANATHAN.

பத்திரவிகிதம்
உள்ளூருக்கு வருஷ-க்கு ரூ 1-50
வெளியூருக்கு வருஷ-க்கு ரூபா 2.
தொலைவிடப்பகுதிக்கு
வருஷ-க்கு -50.
தனிப்பிரதி சதம் 8.

மாசமிருமுறை பிரகடனமாகும்.

இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை.

விளம்பர விகிதம்.
முதன்முறைக்கு— ரூ ச
ஒருகலத்துக்கு 7-50
அரைக்கலத்துக்கு 4-00
கால்கலத்துக்கு 2-60
வரி 1-க்கு 0 8
அடுத்தமுறைக்கு ஷை அரைவாசி.

மலர் க. | யாழ்ப்பாணம், பிரமாதிசவரு பங்குனிமீ கஉ. (16-3-4.) | இதழ்-கக.

உ

குகமயம்

பந்தாடு மங்கையர் செங்கயற் பார்வையிற் பட்டுழலுஞ், சிந்தா குலந்தனைத் தீர்த்தருள்வாய் செய்ய வேன்முருகா. கொந்தார் கடம்புபுடைசூழ் திருத்தணிக் குன்றினிற்குங், கந்தாவிளங் குமரா வமராவதி காவலனே.

சுகசாரன்றன் சால்பினுறுஞ் சண்முக நாதன்பெயரோ, டிங்கிதமாம் பத்திரமு மெங்காருக்—தக்கமுடன், உன்னரியான் னிலைமை யுரைத்தேர்க்கும் பல்கியிட வன்னவ னருளே துணையாம்.

விளம்பரம்.

டைனமைற் வெடி.

என்னிடத்தில்திறமான சமுதமார்க்குபோட்டடைனமெற்வெடி விலைக்கிருக்கிறது, விரும்புள்ளவர்கள் என்னிடத்தில்வந்து விலை விபரம்முதலியவற்றை அறிந்துகொள்ளவும்.

இங்ஙனம்
த. சின்னத்தம்பி
டைனமெற்வெடி வியாபாரி
திருநெல்வேலி கிழக்கு
யாழ்ப்பாணம்.

அறிவிப்பு

ஓயாத  நாதமணி

இதுகண்ணேக்கவரும் இலட்சணம் வாய்ந்துள்ளது அமெரிக்கன் மணியை மயக்குமின்ப ...முடையது ஆங்கிலேயர் முதலிய பலராலுமடித்துப் பரீட்சித்து மகிழ்ந்து பாராட்டப்பட்டுள்ளது இனையவிடங்களிற் பெறத்தகும் விலைக்குக் குறைத்தே கொடுக்கத்தக்கது சாதாரண அளவுள்ள மணிகள் உடனே கொடுக்கத்தக்கதாக எப்பொழுதும் என்னிடத்திருக்கின்றது

ஆ. சிவக்கொழுந்து
மனேஜர்
எஸ். செல்லப்பா அன்ஸன்ஸ்
நல்லூர் யாழ்ப்பாணம்.

பலத்தைக்கொடுக்கும் மருந்துகளில்
பழனி ஆர். எம். கே.

தங்க மாத்திரை

இது ஒன்றுதான் திவ்ய ஔஷதம்.
ஆச்சரியமானகுணம்!
மிக்க இன்பமான சுகம்!!

தேகபுஷ்டிக்கு இதுநிகரற்றமருந்து! இதற்குச்சமானமருந்து ஒன்றுமில்லை- ஒரேகுளிகையில பரீஷைபார்க்கலாம் பலவீனம் சக்திக்குறைவு முதலியவைகளை நீக்கும், நரம்புகளைப் பலப்படுத்தி தேகத்திற்கு வலுவைக்கொடுக்கும். அதிசயமதாலும் பலஹீனத்தாலும் நேரிட்ட சகலவித சோர்வு சக்திகுறைவு, பலஹீனம், ஊக்கக்குறைவு முதலியவைகளை நீக்கித் தேகக்கட்டை உறுதிப்படுத்தி, ஊக்கத்தைக்கொடுத்து தாதுபுஷ்டியை உண்டாக்குவதில் இதற்குமிஞ்சின ஔஷதமில்லை பரீஷைக்கும் பலனுக்கும் உத்தரவாதம் 60-பில்ஸ் ரூபா 10 24, பில்ஸ்ரூபா 4- மாதிரிக்கு 12-பில்ஸ் ரூபா 2. 6-பில்ஸ் ரூபா 1,

10 ரூபாவுக்கு எழுதினால் மிக இன்பமானவாசனையுள்ள கூந்தல் தைலம் 1-ரூபா விலையுள்ள புட்டி 1-ம் 5-ரூபாவுக்கு ஷை அரைப்புட்டி 1-ம் இனாமாகச் சேர்த்து அனுப்பப்படும்

பற்பொடி.

பொறுக்கமுடியாத பல்வலியை ஒருநொடியில் தீர்த்தும் பல் அசைவு, பல் ஆட்டம், ஈகிர்கரைவு, ஈகிர் வீக்கம், வலி, பல்புழுக்குடைச்சல், இரத்தம் வடிதல், வாய்நாற்றம், பல்கூச்சம் இவைகளை உடனே நீக்கும் இதைவிடாது பல்துலக்கிவந்தால் கண்டிப்பாய்ப் பற்களைக் கெட்டிப்படுத்தி ஆயுள்பரியந்தம் தந்தரோகம் அணுகவொட்டாது புட்டி அணா ச ங-புட்டி அணா க க-புட்டி க-உ-0 சார்ஜு ரு-அணா. க-டஜன் ரூபா உ-ச-0, சார்ஜு இனாம்

ஆர். எம். கே. வேலுசாமி,
பழனி.

மட்டக்களப்பு

சுதேச நெசவுச் சீலைகள்.

இவைகள் நமது சுதேச தமிழ்ச்சனங்களுக்காகவும் இலங்கை இந்தியாவியாபாரிகளுக்காகவும் கெட்டிச்சாயம்போட்ட சிகப்பு, நீலம், மஞ்சள், கறுப்பு, பச்சை, முதலிய நூல்களில் சேலைகள், சிற்றுடைகள் முதலியன எம்மிடம் நெசவுசெய்யப்படுகின்றன, தேவையானவர்கள் வி- பி- மூலமாய்ப்பெற்றுக்கொள்ளலாம்.

விலை விபரம்.

கஅ-முள நீளம் உஇ-முள அகலம் சேலைகள்— நீலம், சிகப்பு, கறுப்பு, ஊதா, கபிலம், பச்சைமுதலியன உடல்சாதாவாகவும் கரைக்கோடு சீனக்கோடுகளாகவும் விளிம்பும் முந்தியும் வெள்ளை மஞ்சள், சிகப்பு, கறுப்புமுதலியனவால் செய்யப்பட்டன, ரூபா ச-முதல் ரு-வரை. அதேமாதிரிச்சேலைகள் யo-முள நீளமும் உஇ-முள அகலமும் ரூபா ங-முதல் ச-வரை ஷை சிறங்களில சட இந்த அகலமும் கஅ—கச—கஇ—சக—முள நீளமும் சேலைகள் ரூபா உஇ- உரு- ரு- ருவ-வரை

கோட் கால்சட்டை முதலியனவகளுக்குத் திறமான கன்னலூர்ச்சீலைகள் எம்மிடம் நெசவுசெய்யப்படுகின்றன வேண்டியவர்கள் ரு-சத முத்திரையனுப்பினால் மாதிரி யனுப்பப்படும்.

பெண்பிள்ளைகளுக்காகிய சிற்றுடைகள் அ-முள நீளமும் ரூஉ-இஞ்சி அகலமும் ரூபா கஇ-முதல்-உவ வரை- தேவையானவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற் கெழுதிப்பெற்றுக்கொள்ளலாம்

சோ. நல்லதம்பி முதலியார்,
பிடவைவியாபாரர்,
மட்டக்களப்பு.

சண்முகநாதன்.

யாழ்ப்பாணம்பிரமாதிசவரு பங்குனிமீ கஉ.

ஆரியாசாரம் அநாரியர்க்குச் சம்மதமா?

—(:0:)—

ஆரியாக்கண்ட வாசிகள் ஆரியர் எனவும் அமெரிக்கா முதலிய விளக்கண்டத்தார் அநாரியர் எனவும் சொல்லப்படுவர் அவ்விருவரையும் தற்காலத்தார் கீழைத்தேயத்தார் மேலைத்தேயத்தார் என வழங்குவர். சாதியும், சமயமும், அவ்வச்சாதிசமயங்கட்குரியதொழிலும் நடையும் உடையும் உணவும் ஒழுக்கமும் பிறவும் ஆரியர்க்கே நெடுங்காலமாக தொட்டுவருவன வுள்ளன. அநாரியர்க்கவை கிடையா. அநாரியர்க்குள் சில தேசத்தையேனும் பாஷையையேனுமனுசரித்துச்சாதி (கோத்திரம்) என்பது மிக அருகி வழங்குவது முண்டு. இவருள் கல்வி கேள்விகளால் நிறைந்தோரெனத் தம்மாலும் பிறராலும் மதிக்கப்படத்தக்க ஆரியர் பலருட்சிலர், அநாரியர் வழக்கமே திருந்தமுடைத்தென மதித்து அவ்வநாரிய வழக்கமே பயில்வாராகித் தமதாரியவழக்கை முற்றத்துறந்து அவ்வழக்கை யிகழ்வர். சிலர் ஆரியவழக்கிற் சிலவும் அநாரியவழக்கிற் சிலவுமாகக் கைக்கொள்வர். சிலர் அநாரியவழக்கை முற்று மறந்து ஆரியவழக்கையே கொள்வர் சிலர் வீட்டத்தளவில் அநாரியர்போல நடந்து முன்பட்டதளவில் ஆரியாசாரமாக இருப்பர் சிலர் வீட்டத்தளவில் ஆரியராயும் வெளித்தளவில் அநாரியராகவும் ஒழுகுவர். ஆனால் அநாரியரிற் பெரும்பாலார் ஒருபோது மங்ஙனமல்லர். அவர் தமது நடையுடை பாவனைகளை எவ்விடத்தும் எக்காலத்தும் மாற்றிறல்லர் உதாரணமாக; ஐரோப்பா முதலியமேலைத்தேயங்களினின்று நம் தேயத்திற்கு வருகிறக்கும் அநாரியர்கள் குளிர்மிக்க தங்கள்தேயத்திலணிந்த சட்டை தொப்பிகளை மாற்றி உஷ்ணமுள்ள நம்தேசத்திற்கேற்றவாறு நம்மவரைப்போல அரையில் வேட்டியுடுத்தித் தோளில் அங்கவஸ்திரந் தரிக்கவில்லை? தலையிலே குடுமி வைக்கவில்லை? தலைப்பாகை சூடவில்லை? உண்கலத்திற்கிலை யுபயோகிக்கவில்லை? உணவைக் கரண்டியாலன்றிக் கையாலள்ளியுண்ணவில்லை? நம்தம்பாஷையைப் பேசவில்லை? அவர் பெண்களெல்லாம் நம்பெண்களைப்போல முன்னே கொய்சகம் வைத்து உடுக்கவில்லை? அட்டியல்புல்லாக்குகளை திருத்திக் கணவருக்கும் திருந்துவிக்கவில்லை? மூக்கை யாவாளை தாவணி தரிக்கவில்லை? நம்மவரோ தம் கையாலடுவந்த வேட்டி சால்வை தலைப்பாகைகளை நீக்கிக் காற்சட்டை தொப்பி சப்பாத்தும், உண்கலத்திற்கிலை வெண்கலங்களை நீக்கி, கோப்பையும் கையாலன்றி யுண்பதற்கு மாறாகக் கரண்டி கத்தி முள்ளுகளாலள்ளியுண்டும், சௌசகருமத்திற் சலத்திற்கு மாறாகக் காகிதமும், தோப்பாவைக்கு மாறாக நாசப்பாவையும், பெண்பாலார் கணவனுடையும் என்று இவ்வாறுகொள்ளுகின்றார்கள் மேலைத்தேயத்தினின்று நம்தேயத்திற்கு வந்தவர்களே மாறுதிருப்பராயின் வாசிருப்போர் மாறுதிருப்பரென்பது சொல்லவும் வேண்டுமா? நந்தேயத்தருள் ஐரோப்பா முதலிய தேயங்கட்குப் போகாதோரும் அவர்வழக்கைப்பின்பற்றுவர்; சிங்கப்பூருக்குப்போகாதோரும் கயிலி. கம்பாயந்தரிப்பர், கொழும்பு கண்டிக்குப்போகாதோரும் சிங்களக்கொண்டை முடிப்பர். எச்சாதியெச்சமயமென்றில்லாது எவரிடத்தும் அருந்தல் பொருந்தல்கள் செய்வர். வேண்டுமிடங்களிற் சாதிவேண்டுமென்றும் வேண்டாவிடங்களிற் சாதி வேண்டாமென்றும் வசதிக்குத்தக்கவாறு பேசிக்கொள்வர். தந்தைதாய் குருமுதலிய பெரியோர்களுக்குச் செய்யும் மரியாதைகளையும் அவ்வேரிக்கேனும்முழுதும்மாற்றியும் வைத்துவிடுவர்.

இவையெல்லாம் தற்காலசீர்திருத்தக்கூவெல்லாம் சாதாரியமாகப் பேசியுகொள்வர். [illegible] வரைத்திருத்தக்காலமுறை தலைச்சீலை கட்டிய பழந்த பட்டதாரியாகிய வேடதாரிச் சாமியாரொருவர் ஓர் ஐரோப்பியமாதைக் கண்டபொழுது "என்னிடிக்கேன் செய்வேன்" என்று தலையிலடித்துக்கொள்வார்,, போல ஒருவகையிலேலே சலாம்செய்ய அம்மாது இருகால்குப்பி நமஸ்காரஞ்செய்து தன்னையோமாதியொதுக்கச் செய்தாள் என்றதுக்கப்பட்டுப் பகிரங்கமாகச் சொல்லிப்பச்சாத்தாபப்படுவாராயின் உலகப்பற்று நீக்காதம்மவர் பாடுசொல்லவும் வேண்டுமோ? சாதிமுறைதவறாது சிறந்திய ஊர்ப்புரோகிதன்மகன் தன்விதிவசத்தாற் சாதிதருமந்தவறிப் தற்கொலைகாது, தன்னைப்போல் மன்னுயிருமாக வேண்டுமென்றெண்ணிச் சாதியென்பதேதடா சைவமென்பதேதடா என்றால், பாமரசனங்களென்படார்? இவையெல்லாம் அநாரியசீர்திருத்தம் விளைபற்றுவோராம். எனவே மேலைத்தேயத்தாருக்குள்ளே சாதிக்கட்டுப்பாடு இல்லையென்பதும் ஆரியாசாரம் பின்பற்றியொழுகும் வழக்கமில்லையென்பதும், நன்குபுலப்படுவதாயிற்று. இவைவிதனமாக மேலைத்தேசத்தாரிற் சிலர் சிலகாலங்களில் தமக்குவேண்டுமிடங்களில் மாத்திரம் தங்கள் மெச்சுதற்காக ஆரியாசாரத்தைப் பின்பற்றுவோர்போ லடிப்பது பெருவியப்பே நந்தேயத்திலவர் பெரியோரைக் கண்டவிடத்துத் தங்கலஸ்திரத்தை யொதுக்கமோதிறதலும், தோளிற்சால்வையும், காலிற்செருப்பும், வாயிற்சுருட்டும், நீக்காது அவரெதிரே நின்று வார்த்தையாடலும், அவருக்கிருக்கைமன்றி யொருகாத்தாற் கொடுத்தல் வாக்கல செய்தல்களும் ஒழித்த நவீனதிருத்தங்களும் அநாரியாசாரமன்றி யாரியாசாரமா? சென்றமாசத்திலே யாழ்ப்பாணப் பொலீஸ்கோட்டிலே யித்தகைய சங்கடசம்பவமொன்று நடந்ததாவலருமறிந்ததொன்றே. அதைப்பற்றியிண்டுசிறிது விசாரிப்பாம்.

கல்வி செல்வம் வலி அதிகாரம் முதலியவற்றால் இலங்கைமுழுவதினும் பெருமைபெற்றுக்கண்ட ஔதாரிய குணசீலரான சிந்தங்கேணி ஸ்ரீமான். கா. வயித்திலிங்கப்பிள்ளையவர்களது குமாரருள் ஒருவராகிய ஸ்ரீ சுப்பிரமணியப்பிள்ளையவர்கள் சென்றமாசத்தில் யாழ்ப்பாணப் பொலீஸ்கோர்ட்டில் ஓர் முறைப்பாட்டுக்காகப் பிரதிவாதியாகவந்தபோது முண்டு தமதலங்காரவுடையுடன் தேசாசாரப்படிசென்றார்கள் நீதிபதியவர்கள் உத்தரீயத்தை நீக்கும்படிகேட்டார்கள் அதற்கு

ப் பிள்ளையவர்கள் சம்மதிக்கவில்லை. உடனே நீதிபதியவர்கள் முறைப்பாட்டுக்கடிதத்தையுங் கிழித்து வெளியே போகும்படி ....கட்டளைசெய்தார்கள் இப்பொழுது உத்தமதேசாதிபதியவர்களும் கிரேட்ட நீதிபதியவர்களும் உத்தரீயத்தை அசைத்தாற் போதும் நீக்கவேண்டியதில்லை யென்று பொலிஸ்நீதிபதியவர்களுக் கறிவித்திருக்கிறார்கள்.

இதுதானறியாததும் தான்வழங்காததுமாகிய புதுவழக்கைப் பிறசாதியார்க்குத்தகுமெனக் கற்பிக்கப் புகுந்து தேடிய தவறன்றோ? இன்னும் நந்தேயத்தவரால் மிக அருவருத் தொதுக்கப்படுபவர்களாகிய நளவர், பள்ளர். பறையர்களைக் கொண்டு சமைப்பித்துச் சாப்பிடுகிற மேலைத்தேயத்தார். நம்மவர் காணும்பொழுது அக் கீழ்மக்களைத் தங்கள் வீட்டுவாசற்படியிலும் கால்வைக்கவொட்டாது தடுக்கின்றார்கள். இதென்ன அலங்கோலம். இவர்கள் நமது தேசாசார சாதியாசார சமயாசாரங்களை யறிந்து அவற்றிற் கேற்ப நடப்பாராயின் எவர்க்கும் சம்மதமாகும். அன்றேல் அது வியர்த்தமாய் முடியும்.

அறிவிப்பு.

நமது சண்முகநாதன் விஷயமாக அனுப்பும் மணியாடர்,உண்டியல்,பத்திரிகை,புத்தகம்முதலியவற்றைக்கீழ்க்குறித்த விலாசத்திற்கனுப்பும்படி சந்தாநேயர்களை வேண்டுகின்றேம்.

இங்ஙனம்
மானேசர்
த. இளையதம்பி
சண்முகநாதன் ஆபீஸ்
நல்லூர்
யாழ்ப்பாணம்.

சமாசாரங்கள்.

காலநிலை—வெயிலதிகம், இடையிடையே மழைக்குணமிருந்தும் மழைபெய்யவில்லை. இப்பொழுது சுரநோய்குறைந்து வருகின்றது. முக்காலரூபா கொடுத்தாலும் கூலிக்காரர் கிடைப்பதரிதாகவிருக்கின்றது; சில்லறைக் கடைக்காரர் சதம் ஒன்றுக்குவாங்கிய கறிப்பதார்த்தத்தைப் பத்துச்சதமளவரையிலே விற்பிக்கத் துணிகின்றனர். இதுபோன்றவைகளே தற்காலநிலையாம்

சைவப்பிரசங்க மகோபந்நியாசங்கள்—திராவிடசித்தாந்த சைவ வியவஸ்தாபக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவல பகவத் பாதபாதார விந்தமிராஜ சேகரரும், சித்தங்கேணிச் சைவாங்கிலபாடசாலை திருநெல்வேலி ஸ்ரீ ஞானசம்பந்தஸ்வாமி மடங்களின் பிரதிஷ்டாபகருமாகிய அம்பலவாணநாவலர் சுவாமிகளால் சென்ற மாசிமீ 26உ திங்கட்கிழமையிரவு கொட்டடி வில்லூன்றி விநாயகாலயத்து மண்டபத்தில் அவ்வூர்ப் பிரபுக்கள் பலரது கேள்விப்படி அமர் நீதிநாயகார் விஷயமாகவும், 30உ வெள்ளிக்கிழமையிரவு ஆனைப்பந்தியடிச் சைவப் பெண்பாடசாலையில் சமய உண்மை விஷயமாகவும், மகோபந்நியாசங்கள் செய்யப்பட்டன. பங்குனிமீ 3உ திங்கட்கிழமையிரவு சுண்டிக்குழியிலும் சைவமகோபந்நியாசஞ் செய்யப்படும். சித்தாந்தவிஷயமாகத் தாங்கொண்டிருக்கும் சந்தேகங்களைச் சைவராயுள்ளாரியாவரே யாயினும் வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் வடக்கு வீதியில் சிறி. வே. விநாசித்தம்பி உடையாரவர்களது "மாசலம்" என்னுங் கிரகத்தில் 2-மணி தொடக்கம் 4-மணி வரையில் ஷெ சாமிகளிடம்கேட்டால் அவ்வவர் சந்தேகங்களை நீக்கச் சுவாமிகள் சித்தங்கொண்டிருக்கிறார்கள். க-டி.

சங்கீதகதாப்பிரசங்கம்—இந்தப்பங்குனிமீ 7உ வெள்ளிக்கிழமையிரவு சிவியாதெரு ஸ்ரீ பார்வதிவித்தியாசாலையில் இராமநாதவித்தியாலயத்தின் ஆசிரியருள் ஒருவராகிய பிரம ஸ்ரீ. வி. சி. மகாகணபதி சர்மா அவர்களால் பக்கவாத்திய சகிதமாகச் சிவனடியார்சரித்திரம்பிரசங்கிப்படும்.

நீர்வாவிபுதுக்கல்—வண்ணார்பண்ணையில் கிலமுற்றிருந்த நீர்வாவி என்னுந் தடாகத்தைத் திருத்தும்பொருட்டு அவ்வூர்ப் பிரபுக்கள் யாவருந் திரண்டு முன்வந்து சென்றமீ 30உ முகூர்த்தவேலை தொடங்கியிருக்கிறார்கள் என்பதையறியப் பேரானந்தமே. இதுவன்றோ தருமம்!

புத்தகவரவு—வள்ளியம்மை திருமணஞானக் கருப்பொருள் விளக்கம், என்னும் புத்தகம் [illegible] பிரமஸ்ரீ ப. சிவசர்மா அவர்களால் இயற்றப் பட்டுள்ளது. பிரமஸ்ரீ ம.முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள் பிரமஸ்ரீ சு. ஏரம்பையரவர்கள் மகாவித்துவான் அ. குமாரசுவாமிப் பிள்ளையவர்கள் முதலிய வித்துவான்களது சாற்றுகவிகளும் பெற்றுள்ளது. சர்மா அவர்கள் ஸ்ரீ கந்தப்புராணத்தின் வள்ளியம்மை திருமணப்படலத்தின் செய்யுள்களுட் பெரும்பாகத்திற்குக் குறிப்புப் பொருள் செம்பொருளை யிருபாகமாகப் பிரித்தெளிவாய் விளக்கி யெழுதியிருக்கின்றார்கள் இதன்விலை சதம் 50 நமக்கனுப்பிய பிரதியை யுவந்தேற்றோம். ஏனைய படலங்களுக்கும் மற்றைப் புலவர்கள் வித்துவான்களாயுள்ளவர்களும் இத்தகைய கருப்பொருள்களை யெழுதி வெளியிட்டால் உலகினர்க்கெவ்வளவு அறிவுவிருத்தியாகும் தெய்வயானையம்மை திருமணத்தின் கருப்பொருளையும் எழுதி வெளியிடுமாறு திருவருள் சர்மா அவர்களை யூக்கப்படுத்துவதாக. சர்மா அவர்கள் இதுவிஷயத்தில் எடுத்துக்கொண்ட பிரயாசம் மிகமெச்சத்தக்கதே.

மரணம்—வண்ணை வைத்தீசர் ஒருதுறைக்கோவை தோத்திரமஞ்சரி முதலிய நூலாக்கியோனும், தமிழ் வித்துவானும், சமயபக்தனுமாகிய வண்ணை வர்த்தகர் ஸ்ரீ க. வைத்தியலிங்க பிள்ளையவர்களின் மனைவியார் சென்றமாசத்தில் இவ்வுலகவாழ்வை நீத்தனர் என்னுஞ் செய்திகேட்டு விசனிக்கின்றோம்.

சங்கமேறல்—யாழ்ப்பாணத்து உடுவில் வாசராகிய பிரமஸ்ரீ வ. மு. இரத்தினேஸ்வரையரவர்கள்,திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும குன்றமெறிந்த குமரவேளும் சந்தனப்பொதியைச் செந்தமிழ்முனியும் நக்கீரரும் ஆகியபலரும் இருந்துமுச்சங்க நடாத்திய மதுரையின் கண்ணே முத்தமிழையு முந்நாள் வளர்த்த பாண்டியரேபோலப் பாண்டித்துரை மன்னரவர்களாற்றாபிக்கப்பெற்ற மதுரைத்தமிழ்நான்காஞ் சங்கத்திலே தெரிந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர் பன்னூற்றுவரோடு இவருமொருவரெனச் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். இவர் சைவப்பிரகாச வித்தியாசாலையிலே தம்மோடுடன் கற்றமாணாக்கரினுங் குறைந்தபயிற்சி யுடையரேயாயினும் தமதிடையறாப் பிரயாசத்தாலும் விடாமுயற்சியாலும் வித்துவான்களல்லாதார் சேரற்கியலாத இத்தகைய சங்கத்திற்சேர்ந்து கொண்டது பெருவியப்பே. சங்கத்திற்கும் மிகமதிப்பே.

சுவாமி வேதாசலர்—சிலமாசங்களாகக் கொழும்பிற் சஞ்சரிக்கும் சுவாமி வேதாசலம் சமீபத்தில் யாழ்ப்பாணம் வருகிறதாம். யாழ்ப்பாணத்தவர்மீது பேரபிமானம் பூண்டவராகலின் சுவாமியின் வரவு பலரால் எதிர்பார்க்கப்படுகிறது.

தூக்குவிலக்கு—பொலீசு கந்தையாவைக் கத்தியாற் குத்திக்கொன்ற வல்லி என்னும் அஞ்சனந்தான்வு கழுவி, சுப்பிறீங் கோட்டாரால் விதிக்கப்பட்ட மரணதண்டனையால் நழுவிச் சிறைத்தீர்ப்புப் பெற்றான்.

நாட்டுகோட்டையார் புகழ் நாகை வேதாசலம் அவர்களாலன்றோ புடமிடப்பட்டது?

நாட்டுக்கோட்டை நகரவணிகர் தம் பெருந்தருமச்செயல் நானிலமறிந்ததாயினும் அதனை யூன்றி விளக்கினோர் சுவாமியாகிய வேதாசலமவர்களேயாவர் அதனை, "அரக்கர்பாவமுமல்லவரியற்றிய வறமுந்—தூரக்கநல்லநூறுதந்தனையேமொழி மடமான்—இரக்க மின்மை யன்றோ வின்றிவ்வுலகங்களிராமன்—பரக்குந் தொல்புகழமுதினைப் பருகுகின்றதுவே" என்னும் கம்பர்வாக்காலும், "ஏதமிலமரர்தம்மை யான்சிறைசெய்த தெல்லாந்—தீதெனவுரைத்தார்பல்லோரன்னதன் செயற்கையாலே—வேதமுமயனு மேனைவிண்ணவர்பலருஞ் சானுறதனிவ கனுகப் பெற்றே நான்றமேயானதன்றே" என்னும் கச்சியப்பசிவாசாரியார் வாக்காலு மறியலாம் என்னை? சுவாமிவேதாசலம் வாய்கூசாதோதுவிடுமாயின் மதுரை மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்களும், பிறரும் நாட்டுக்கோட்டையார் தேட்டமாகிய தருமப்புகழீட்டத்தினை இத்துணைப் பெருமகிழ்ச்சியோடு எடுத்தெடுத்தும் புகழ்தற்குச் சமயம்வாய்க்காதாகலின்.

இது விஷயத்தில் நாட்டுக்கோட்டையாரும் அவர் தருமத்தை யறிந்தோரும சுவாமிவேதாசலத்தில் நன்றி பாராட்டக் கடப்பாடுடையரே யாவர்.

மாதாவின் மனத்திடம்—ச[illegible]போசிலேயுள்ள துரைசாமி என்பவன் தன்மனைவியாகிய சின்னத்தாயி என்பவளைப் பிரியவீனமாய் நடத்தியதற்காக அவளைத்தாய்தன்வீட்டுக்கழைத்துச்சென்றாள். துரைச்சாமி தன்னுடன்வரும்படி சின்னத்தாயியைப் பலமுறைகேட்டும் அவள் மறுத்ததால் கோபங்கொண்டு கத்தியால் பலவிடங்களிற் குத்தினான். இதுகண்ட தாயானவள் தன மகளுக்கு மேலும் குற்றுவிழாமல் அவளுக்குமேல்விழுந்து மறைத்தாள். மகளுக்கு விழவேண்டிய குற்றுக தாய்க்குவிழுந்ததால் தாய் மரணமடைந்தாள். துரைசாமியும மரணதண்டனை யடைந்தான.

பதினொருபூவையரைமணந்த ஒருவன்—நியோர்க்பட்டினத்திலுள்ள லோறன்ஸ் என்பவன் தன் 52-வயதுக்குள்ளாகப் பதினொரு பெண்களை மணந்தானாம். அவனது மரணத்தினபொழுது அவனால் விலக்கப்பட்ட ஏழுமனைவியர் வந்தனராம்.

பிள்ளைக்களவு—பாரிஸ்நகரத்திலே லாமோர்த்பூவ்றென் என்னுமிடத்திலுள்ள கல்லூரியிலிருந்து களவுபோன கரேல்வழ் என்னும் சிறுவனையும் அவனைத் திருடினோர்களையும் நோர்வேயிற்பிடித்து பாரிஸ்பட்டினத்துக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். ஷெ சிறுவன் நியூயோர்க்கிலுள்ள சிற்பசாஸ்திர நிபுணரொருவரின் மகன், ஷை கல்லூரியிற்படிக்கும்பொழுது ஓர் அமரிக்க செல்வக்குமரி பாடசாலையிற் சென்று கறல் என்பவனையும் வேறு இரு சிறுவரையும் அழைத்து ஒருமோட்டர்வண்டியில் வைத்துக்கொண்டு செல்லுமவழியில ஒருபிரபுவும அவர்களோடுசேர்ந்து பாரிஸ்பட்டினத்துக்கு சேர்ந்து மற்றைச்சிறுவரைப் பாடசாலைக்குப் போமாறு அனுப்பிவிட்டு மூவரும் மறைந்தனராம்.

கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்கட்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்]

சாணக்கிய நீதிவெண்பா.

இது வடமொழியிலுள்ள சாணக்கிய சதகம் என்னும் நீதி நூலின் மொழிபெயர்ப்பு வெண்பாவில் அமைத்துப் பாடப் பட்டிருக்கின்றது. சொன்னோக்கம், பொருணோக்கம், சன்னதியும் அறிஞர் சீராமல் தூதல் காரணமாகச் சிலவெண்பாக்கள் இங்கே எழுதப் படுகின்றன.

நல்வாழ்க்கை.

ஏவல் புரிவோனு மில்லாளும் புத்திரனும், ஆவலொடுஞ் சொற்கேட் டமைகுவரேற்—பூவுலகே, வாழுமிட மானுலும் வானுலக வாழ்க்கையே, தாழுமியல் பில்லையே தான்.

பெருந்துயர்.

சொன்மறுக்கு மேவலுந் துட்ட மனையாளுங், கண்மையிலா மூடனொடு நட்புறலும்—மென்மேலே, வாரவு சேர்மனையு மோடி வருமாண, காரணமே யென்றுரைத்தார் கண்டு.

சுகம்.

எல்லாருங்கொள்ளு மினியவுரை கூறுமனை நல்லாளுமன்புடைய நற்றாயும்—இல்லாத இல்லஞ்சுகந்தருமோ வின்பத்தொடுவாழ நல்லமரக் காட்டகமே நன்று.

அழகு செய்வன.

தாக்குருவம கெட்டார்க்குச் சாற்றுகல்வி யேயழகு; மாங்குயிலுக் கின்னிசையே மன்னழகு—நீங்ககன்றே, போன முனிவோர்க்குப் பொறையே யழகுவழி, ஆனகற்பே பெண்கட் கழகு.

வெறுமை.

கற்கையிலாச் சிவனம்பாழ் கான்முளையில் லாமனைபாழ், திக்கி லுறவில்லாத் திக்கும்பாழ்—தொக்கபொருள், இல்லா வறியவருக் கெய்துவதென் னாராயின், எல்லாம்பா ழென்றே யியம்பு.

வீண் செயல்.

வேதப் பொருளுணர்ந்தோன் மேவாப் பிதிர்கடனும், மாதக் கிணையில்லா மாமகமும்—ஓதமுகு, நண்ணிய தோர் வந்தியு நாதனிலாப்படையும், எண்ணும் பயன் கொடுப்ப தின்று.

அளவு கடத்தல்.

மிக்கசெருக் காலிலங்கை வீழ்ந்ததே மாவலியும், மிக்ககொடை யலாசு விட்டிழுந்தான்—மிக்கபெரு, மானத்தாற் கௌரவரு மாண்டா ரளவுகடந், தானசெய லெல்லாந் தீங் காம்.

குரு.

வேதியருக் கக்கினியே மேவுகுரு வேதியர்கள், ஆதியர்க்கு வேதியனே யானகுரு—மாதருக்குக், கொண்டவனே வாய்த்த குருவிருந்தாய் வந்தடைந்த, கொண்டவனே யெங்குங் குரு.

தவப்பேறு.

உண்ணப் படும்பொருளு மூன்றிரும்பு மெய்ச்சுகமும், எண்ணற்ற செல்வமவந் தெய்துதலும்—திண்மைபெறப், பல்பொருளு மீந்துவக்கும் பண்பும் பெருந்தவத்தால், அல்லது வந்தடையா வாம்.

பெறற் கருமை.

ஒத்தொழுகு மில்லவளு முன்னுவகை சேர்கிளையும், சத்தியமு நன்மைமாலதந்ததவும்—புத்திரனும், பெற்றுக்கொளலரிது பெற்றாற் பெரியசுகம், முற்றாமுள தென்றே மொழி.

நல்லோ னருமை.

மன்னுமலை தோறுமிலை மாணிக்கஞ் சந்தனமும், துன்னு நெடியவனந் தோறுமிலை—மின்னுமுத்தம், சொல்லானைக் கொம்பினடி தோறுமிலை நல்லோனும், எல்லா விடத்து மிலை.

துக்கம் பெருதவர்.

கற்றமைந்த வாதலனுங் கற்றோன்றனக்குறவாய், பெற்றவனு நன்மக்கட் பேறடைந்து—மற்றினிய, நாயகனை நீத்தாளு நாளும் பிறர்போல, ஆயது யரெய்த லரிது

துக்கம் பெறுவோர்

நல்லறிவில் லாதவற்கு நற்கலைகள் லாதவற்கும், நல்லரச னில்லாத நாட்டவர்க்குஞ்—சொல்லினிய, மக்கட்பே றில்லாத மாணவற்கு மின்பமெங்கே, துக்கப் பேறுமெனவே சொல்,

கட்டம்.

யாதேனுங் கைப்பொருடா னில்லாத வாணிகமும், தீதான நீசனிழ்ச் சேவகமும்—ஆதாரம், இல்லா கிழேயு மிலைப்பாடு மென்றிவைகள், எல்லாந் துயர்தருமென் றெண்.

தீங்குருதவர்.

பேதையர்க்கு மித்திரனு மேற்குலத்து வந்தவனே, டோதம்பெருக்கொடர்ச்சியுற்றவனும்—ஞாதியர்பால், ஒன்றிக்கலந்துசெறி வுற்றவனுந் தீங்கடைதல், என்றுமிலை யென்றே யியம்பு.

இங்ஙனம்
அ. குமாரசுவாமிப்பிள்ளை,
சுன்னாகம்.

சமயநூற் கல்வியும்நம்மவரும்.

சித்தாந்த சைவத்திறம் விளக்கு மெய்கண்டான் முத்தாந்தப் பாதமுடி

சித்தாந்தத் தேசிகன்றன் திருக்கடைக் கண்சேர்த்
சென்ன மொன்றிலே சேன் முத்தராக [இச்
வைத்தாண்டு மலங்கழுவி ஞானவாரி
மடுத்தானந்தம்பொழிந்து வருமிப்பெரிய முத்தி
முத்தாந்தப் பாதநிழற்கீழ் வைப்பனென்ற
மொழிகடவு முலகரெல்லா மூர்க்கராகிப்
பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப் பாவப்
பெருங்குழியில் வீழ்ந்திடுவ ரிதுவென்ன பிரர்சி.

(பத்திரிகைகளிலே வெளிப்படும் ஏனைய விஷயங்களைப் போல இதனையும் வாசித்தொதுக்கிவிடாது, இதனைக் கவனித்து இருமுறையாவது வாசித்து இதிலே கூறப்பட்டுள்ளவைகள் யதார்த்த முள்ளவைகள் தாமோ அன்றோ என்பதனைச் சிறிதுன்றிச் சிந்திக்குமாறு அறிஞர்களை வேண்டுகின்றோம்.)

உலகத்திலே வழங்கப்படுகின்ற சமயங்களெல்லாம் தத்தமக்குரிய ஒவ்வொரு சமயநூலைக்கொண் டுள்ளன வென்பதனை மறுப்பாரொருவரு மிலரேயாம். அவ்வச் சமயானுசாரிகளும், தாந்தாம் மெய்யெனக் கொண்டொழுகுஞ் சமயநூல்களைக் கடைப்போக முழுது முணர்தற்கு வல்லமையுடைத் தில்லாரல்லரேயாயினுந், தத்தமக்கு இன்றியமையாது வேண்டற்பாலனவாயுள்ள விசேட பகுதிகளை யறிந்து அறியாதிருக்கவே மாட்டார்கள். அஃதாவது, தமது சமயத்தை யென்னவென்று பிறரால் வினவப்படும் பொழுது, தடையாது மின்றி உடனே தமது சமயத்தை இது [illegible]க் கூறிமுடிக்கும் ஆற்றலுடையவர்களேயாம். அஃதிங்ஙனமாக, [illegible] சமயங்களையெல்லாஞ் சோ[illegible]ண்டு, அவற்றுக்கெல்லாஞ் சித்தாந்தமாய், அச்சமயங்க ளெல்லாவற்றின் பொருண்முழுதையுந் தன்னகத்தே கொண்டுள்ளதாய், எத்தனை யுக்திகளைக் கொண்டளக்கப் புகினும், இலக்கண [illegible]ங்களுக்கெல்லாஞ் சிறிதா[illegible]தநாய், ஞானநெறியாகிய [illegible]ளையே விளக்குவதாய்ச், தத்துவசமயாதீதமாய், முடிவிலே ஏனையசமயங்களொன்றுக்கு மெட்டாத பரமுத்தியைத்தரவல்லதாயுள்ள நமது சுத்தாத்துவித சைவசித்தாந்தத்தைச் சேர்ந்தவர்களாயுள்ள நம்மவர்களது நிலையை இங்கே சிறிதாராய்வாம்.

நம்மவருட் பெரும்பாலார், விபூதிபூசுதலும், கோயிலுக்குப்போதலும், விரதமனுட்டித்தலுமே நமது சமயமெனக்கருதி நடக்கின்றனர். வேறு பலர், கடன்பட்டாயினும் உருத்திராபிஷேகஞ் செய்வித்தலும், அருச்சனை செய்வித்தலுமே சமயமென

பெனக்கருதி நடக்கின்றனர். வேறுபலர் மடங்களைக் கட்டுவித்தலும், பிராமணருக்கரிசிகொடுத்தலும், போலிவேடத் தடிச்சாமிகட்கும் சட்டுக்குடிப் பண்டாரிகட்கும் விலாப்புடைக்க உண்ணுமாறு அன்ன மளித்தலுமே சமயநிலையெனக்கருதி நடக்கின்றனர். வேறுபலர், தமக் கெவ்விதத்தாலாவ துரிமையில்லாத கல்லாடை (காவியுடை) தரித்தன் முதலிய பொய்வேடத்தைப் பொலியப் பூண்டு; தம்மைச் சாமியெனவும் அதுஇது இந்தக்கட்டை யெனவுங் கூறிக்கொண்டு, பிறரது உப்புக்குங்காடிக்குங் கூற்றேயாகத் திரிதலொன்றே சமயநிலையெனக்கருதி நடக்கின்றனர் வேறு பலர், ஆடு கோழிகளை வெட்டிப் பலியிட்டுத் துட்டதேவதைகளை வழிபட்டுக் குடித்து வெறித்துக் களியாட்டயர்ந்து திரிதலே சமயநிலை யெனக்கருதி நடக்கின்றனர். வேறுபலர், சிவபூசை முதலிய சைவக்கிரியைகளும், சைவாசார ஒழுக்கங்களுந் தமக் கிழுக்கைத் தருதலின் அவற்றைக் கீழ்நிலைக் குரியவென வெறுத்தொழித்து, உலகமெல்லாம் பிரமமென்றும், தாம் எதனைப் புரியினும் அது தம்மைப் பற்றுதென்றும் வாய்கூசாது பேசிக்கொண்டு திரிதன் மாத்திரையி னமையாது, தம்மின் மேம்பட்ட அறிஞர் பிறரொருவரிலரெனக் கருக்கி யெழுந் திறுமாந்துகொண்டு, விதிவிலக்குக்களொன்றுந் தமக்கிலவென வெறுத்தொழித்துத் துட்ட மிருகங்களைப்போல அக்கிரமங்களெவற்றையுந் தவறுது நேர்ந்தவாறு செய்துகொண்டு திரிதலே சமயநிலையெனக்கருதி நடக்கின்றனர். வேறனேகர், இம்மையி லநுபவிக்குஞ் சிற்றின்பபோகங்களே யன்றி ஆங்கோர் பேரின்ப முண்டென்பதனை முற்றுகமறந்து, பெண்டுபிள்ளைகளோடுண்டுடுத்து, வாழ்தலொன்றுமே சுகமென்றிருத்தலே சமயநிலையெனக்கருதி நடக்கின்றனர். இங்ஙனமேயாக இவண் எடுத்து விதந்து கூறப்பட்டுள்ள ஒருபகுப்புக்களுள்ளே ஏனைய நிலையுடையோரெல்லா மடங்குவர். அதனை உய்த்துணர்ந்தறிந்துகோடலறிஞர்கடனேயாம்.

இவர்களு ளொருவராவது, கருவிநூல்களாகிய இலக்கிய இலக்கணங்களையாவது சமயநூல்களையாவது அறியவே மாட்டார்கள். இவர்களுளனேகர், அல்லியரசாணிமாலை பவளக்கொடிமாலை ஏணியேற்றம் முதலிய வீணகதைப் புத்தகங்களையும், வேறுசிலர், கல்வியறிவில்லா மததபதியினர் சிலரால் வேதாந்தநூல்களென வெளிப்படுத்தப்பட்ட மாயாவாதக் கோட்பாடுகளே பொதியப்பெற்றுள்ள வீண்குச்சிலிக்கைப் பிழைப் புத்தகங்களையும் படித்துக்கொண்டு, தம்மனம் போனவழி நடந்துழன்று திரிகின்றார்கள். இவ்வமூடர்களாகிய ஆபாசவீணநூல்களை, ஞானிகள் செய்த நூல்களெனவுந் துணிந்து பேசுகின்றார்கள். இவைகளைத் தருக்க விஷயமூடர்கள் பொதியப்பெற்றுள்ள போலிநூல்களை ஞானிகள் வாக்கென்று பிறர்க்குனவெனப் பிதற்றித் திரிதல், ஞானிகளிலக்கணந் தெரியாதார் கூற்றேயாமென்க. அளவைகளோடு முரணு நூல்களை ஞானிகள் ஒருகாலத்தாவது செயமாட்டார்களென்பதனை, நாம் முன்னர் வெளிப்படுத்திய "சுத்தாத்துவிதசைவசித்தாந்த மகத்துவம்" என்னும் விஷயவாயிலாக விளக்கிக்காட்டியிருக்கின்றேமாதலின், அதனை ஈண்டு விரித்திலம்.

இனி, "அரக்கின்றிகட்டா டியற்றேறி நம்பிய—நூலின்றிக் கோட்டி கொளல்" என்பதற்கிலக்காக, இவர்களுட் சிலர் சபைகளிலுந் துணிந்தெழுந்து நின்று பிரசங்கமுஞ் செய்யவெழுகின்றார்கள். சிற்றின்பகதாப்பிரசங்கங்களையுஞ் சிலர் செய்கின்றார்கள். இவர்களது பிரசங்கங்களைக் கேட்பவர்களெல்லாம், நாம் முன்னே விளக்கியவாறு கருவிநூற்பயிற்சியுஞ் சித்தாந்தநூற்பயிற்சியு மில்லாத பாமரர்களே யாதலின், அப்பிரசங்கிகள் செய்யுஞ் சாலங்களான் மயங்கி, அப்பிரசங்கங்கள் செவிக்குநன்றாயிருக்கின்றனவென்று மகிழ்ந்து செல்வர். பேசப்பட்ட விஷயமியாதென்று பிறர் வினவுமிடத்து; விஷயமொன்றும் விளங்கவில்லைக், காதுக்குமாத்திரம் இனிமையாயிருந்ததென்று விடை பகர்கின்றனர். இதனால், கல்வியறிவில்லாத இவ்வினர்களது பிரசங்கங்களினாலேயாதும் பயனின்றென்பது நன்குபுலப்படுகின்றது. பொருள் யாதுமில்லா வீண்வார்த்தைகளைவாயோயாதுபேசிக்கொண்டிருப்பினும், "குடுகுடுப்பை"ச் சாத்திரிகளைநிகர்க்க இவ்வீணப்பிரசங்கிகளும் இவர் சிஷ்யர்களுமாகச் சேர்ந்து, செவியகங்குளிருமாறு சமயப்பிரசங்கமாரி பொழிந்து நந்தேசத்தைத் திருத்தியருளிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களையுமன்றோ, நாழிகைக்கொருவார்த்தை பேசத்தெரிந்தவரேயன்றி மூச்சுவிடாது பேசத்தெரியாதவரென்று நாப்புழுக்கப் பேசிமகிழ்கின்றனர்! இத்தயமூடர்களை யாரென் செய்யவியலும்! ஆயின் இம் மூழுமக்களால் ஒருபயன்மாத்திரம் நமக்குக் கிடைத்திருக்கிறதென்று கூறலாம். "மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டிற்—காக்கை யுவக்கும் பிணம்" என நம்முதறிவாளர் அருளிச்செய்த உண்மைத் திருவாக்கு ஒருகாலத்துந் தவறமாட்டா தென்பதனை, இம்மூழுமக்கள் இவ்வியாழ்ப்பாணத்திலே வந்து பிறவா தொழிவரேல், நாமொருகாலத்தாவது அறிந்துகொள்ள இயலாதவர்களாக முட்டுற்று, அப்பெரியோர்களிடத் தபராதமேற்றி அவர்களைக் குறைகூறவேண்டியவர்களாயிருப்போமென்பதொருதலையேயாம்.

இம்மூடர்களிலை இங்ஙனமேயாக, இனி ஆங்கிலகலையிலே வல்லவர்களாய், நாகரிகத்திலும் அறிவிலுஞ் சிறந்தவர்களாகத் தம்மை மதித்துக்கொண்டு நமதூரைத் திருத்துகின்றேமென்று நவீனமாக இப்பொழுதெழுந்து, சபைகள்பலவற்றைப் பற்பல இடங்களிலே தாபித்துப் பலபிரசங்கங்களைச் செய்துகொண்டுவருகிற ஆங்கிலபண்டிதர்கள், சமயநூற்பயிற்சியில்லாதவர்களால் விபரீதமாக விளங்கி மொழிபெயர்க்கப்பட்ட ஆங்கிலநூல்களையேயன்றித் தமிழிலேயுள்ள கருவிநூல் சமயநூல்களை நேரே கற்றறியாராதலிற், சமயநிலையெதனை அறியும் ஆற்றலில்லாதவர்களாய், நமது சமயத்தை ஆங்கிலேயர்கள் இட்ட இந்துசமயமென்னும் பெயரால் வழங்கிக்கொண்டு, தாங்கள் வேதாந்தத்தை அனுசரிக்கின்றேமென்றுஞ் சொல்லிக்கொண்டு, நமது சித்தாந்தசைவத்துக்கு முழுமாறுயுள்ள மாயாவாதக்கோட்பாட்டையே பிரசங்கிக்கத் தொடங்கிக்கொண்டார்கள். கல்வியறிவினாலுஞ் சமயநூலறிவினாலுஞ் சிறந்த சைவவித்துவான்களைத் தங்கள் சபைகளிலே அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்கின்றார்களில்லை. இவ்வாங்கிலபண்டிதர்களே இக்காலத்துச் செல்வாக்கினாலும் உத்தியோகத்தினாலுஞ்சிறந்துள்ளாராதலிற் சனங்களெல்லாம் அவர்களது கோட்பாட்டையே பின்பற்றுவாராயினர்.

இங்ஙனமேயாக, இப்பொழுது நமது சமயநூற்கல்வி கற்பாரிலராக வந்துமுடிந்திருக்கின்றமையினாலன்றோ, இவ்வியாழ்ப்பாணத்திலே சமய அறிவு சுருங்கிச், சனங்களெல்லாம் தாமனம்போனவாறு ஒவ்வொருவரு தத்தமக்கு இலகுவாகத் தோன்றும் ஒவ்வொருவழியை அதுதான் சித்தாந்தநெறியென விபரீதமாக விளங்கி நடக்கத் தொடங்கிக்கொண்டார்கள். அதனால், ஞானிகளெல்லாம் மெய்யெனக் கைக்கொண்டொழுகிய சுத்தாத்துவிதசைவசித்தாந்த சமயத்துக்குச் சிரத்தானமாயுள்ளது யாழ்ப்பாணதேசமொன்றேயாமென்று இந்தியாவிலுள்ள அறிஞர்களாலே நெடுங்காலமாகப் புகழ்ந்து பாராட்டப்பெற்ற நமது யாழ்ப்பாணத்திலே, இப்பொழுது நமது சித்தாந்தசைவம் அருகிவருதற் கேதுவாயிற்று. ஆன்மாக்களெல்லாங் கடைத்தேறற் கேற்ற சமயஞ் சித்தாந்தசமயமொன்றேயாமென்னு முண்மைநூற் றுணிபுணராத நம்மவர் சிலர்க்கு, இவரொழுகும்வழி அத்தவழியே பரமெனப் புலப்பட்டிருப்பினும் நாமென்செய்வோம்! நமதுபேச்சை மெய்யென்று நம்பிக்கை கொள்பவர் யாவர்? இவர்களது விபரீதவழியைக் குறித்தன்றோ சுத்தாத்துவித சைவசித்தாந்தியாகிய நமது தாயுமானசுவாமிகளும் "உலகவர்பன்னெறி யெனக்குப் பொருத்தமோ சொல்லாய் மௌன சற்குருவே போற்றி நின் பொன்னடிப் போதே" என அருளிச் செய்தனர் போலும்!

இங்ஙனமாதலால், ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்களுடைய காலத்திலே அவர்களால் மிக்கோங்கிப் பிரபல முற்றிருந்த நமது சுத்தாத்துவித சைவசித்தாந்த சமய அறிவு இப்பொழுது சுருங்கி வருதற் கேதுவாயிற்று. நாவலரவர்கள் காலத்திருந்தவர்களாயிப்பொழுதுள்ள சிலரினாலே தான் நமது சித்தாந்த சைவஞ் சிறிது விளக்க முற்றிருக்கின்றது. இச்சிலரும் போயொழிந்தால், நமது யாழ்ப்பாண தேசம் முழுவதும் மாயாவாதமும் கிரீச்சுர வாதமும் உலோகாயதமுமே மலிந்து, நீசதேசமாக வருதற்கு யாதுஞ் சந்தேகமில்லை. இனி நமது தேசத்தைப் பழைய நன்னிலைக்குக் கொண்டுவரவேண்டுமேயானால், இங்கேயுள்ள செல்வப்பிரபுக்களுள்ளே அறிஞராயுள்ள சிலராவதொருங்கு திரண்டு, கோயில்களையும் மடங்களையுங் கட்டுதலைவிடுத்து, ஊர்கடோறுஞ் சித்தாந்த சைவ சபைகளைத் தாபித்து நடத்திவர முயலல் வேண்டும். ஒழுக்கத்தினுஞ் சமய அறிவினுஞ் சிறந்த சைவவித்துவான்களை நியமித்துச் சைவப் பிரசங்கங்களைச் செய்வித்து வரல் வேண்டும். சாரமில்லாத வீண்கதாப் பிரசங்கங்களினாலே சனங்களை அணுப்பிப் பொருள் பறித்துத் திரியும் போலிச்சாமிகளை, ஊர்க்குள்ளே புகுந்து பிரசங்கஞ் செய்யாதவாறு தடுத்தல் வேண்டும். சைவ வித்துவான்களினாலே செய்யப்படும் பிரசங்கங்களை ஒவ்வொன்றுந் தவறாது சீவியிருந்து பிரசங்கமுடியுமளவுக்கு மிருந்து கேட்டு வருதலோடமையாது சாதாரண சனங்களையும் அவ்வாறே போயிருந்து கேட்குமாறு செய்ய முயலல் வேண்டும். இவற்றுக்கெல்லாம் முழுமுதற் காரணமாயுள்ள சித்தாந்த சமயக் கல்வியைக் கற்பிக்கும் வித்தியாசாலை யொன்றையும் சைவ பத்திரிகை யொன்றையுந் தாபித்து நடத்திவரல் வேண்டும். இவைகளே நமது சமயத்தைப் பரிபாலித்தற் கேற்ற நல்வழிகளாம். தருமங்களெல்லாவற்றுள்ளுஞ் சிரத்தானமாயமைந்துள்ள பரம தருமமிதுவேயாம். இதனையொழித்துச் செய்யப்படும் ஏனைய தருமங்களொன்றினாலும் யாதும் பயனில்லையாம். அறிஞர்களாயுள்ளார் எவரேயாவது சிறிது நின்று சிந்தித்து நோக்குவார்களேயாயின் இது யதார்த்தமேயாமென்று அங்கீகரியாதொழியவே மாட்டார்கள். ஊர்களிலேயுள்ள பல்பல பிரபுக்களினாலே வாகீக்கப் பெற்ற பெருந்தொகைப் பொருள் கொண்டு இக்கல்லூரியை நடத்திவரும் மகாவரியபிரபுக்களையும் இத்தன்மையோர் அல்லரோ வென்பதனைச் சிறிது சிந்திக்குமாறு வேண்டுகின்றேம்.

நாம் இங்கே யெடுத்து விளக்கிக்காட்டிய வழியொன்றனை விடுத்து வேறெவ்வித வழிகளைச் செய்யுமாறு முயலினும், நமதுசமயத்தைப் பழைய நன்னிலைக்குக் கொண்டுவருதல் ஒருகாலத்தும் இயலாதென்றேயாம். அதுநிற்க, பலவருடங்களாக வண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலைக்கதிபதியாகிய ஸ்ரீமத். க. கைலாசபிள்ளையவர்கள் சில மாணவர்களைச் சேர்த்து வித்துவசிரோமணியாகிய சுன்னாகத்து ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்புலவரவர்களைக் கொண்டு உயர்தரகல்வியைக் கற்பித்துக்கொண்டுவந்தார்கள். பிள்ளையவர்களும் அவ்விடத்து நின்று வித்தியாசாலையை விட்டு நீங்க இப்பொழுது மிகச்சிலமாணவர்களே கற்று வருகின்றனர். தமிழ் ஆங்கிலமென்னும் இருபாஷைகளிலும் மிக வல்ல பண்டிதரும் பத்தியுடையவரும், சித்தாந்தநூற் பயிற்சியுடையவரும், வைபவமிலனை யாக்கரும், ஏன்கேக புத்திரநாயிருந்த சிவஞானசுந்தரம் என்பவருமானவர்களினாலே, சித்தாந்த சைவத்தைப் பரிபாலிக்கும் பொருட்டாக நமது பழைய உதயபாநு என்னும் பத்திரிகையை வெளிப்படுத்துமாறு நாம் முயற்சிசெய்தோம். நமது பிராரத்த வினையினாற், சென்றவருடத்திலே அப்புத்திர சிகாமணி சடுதியிலே சிவபதமடைந்து விட்டனர். அதனால் அம்முயற்சியை இப்பொழுது கைசோரவிட்டிருக்கின்றேம். இங்ஙனமாதலினாலே பரமதருமமாகிய இச்சிவ கைங்கரியம் நம்மிருவரது முயற்சியினாலே முற்றுறத் தக்கதொன்றன்றேயாம். இனி இதனை நிறைவேற்றுதற்கேற்ற தக்கவழி மேலே விளக்கிக் காட்டிய வழியொன்றேயாம். தருமஞ் செய்கின்றேமென்று சொல்லிக்கொண்டும் வருந்தித்தேடிய திரவியங்களை அனுவசியகாரியங்களிலே செலவிடுஞ் செல்வப்பிரபுக்களெல்லாஞ் சேர்ந்து இதிலே தலையிடுவார்களேயாயின் இது நிறைவேறுமன்றோ? இதுநிறைவேறுமாறு போகவோட்டாது இப்பரமதருமத்தைவிடுத்து வேறு தருமங்களைச் செய்யப் புகுதல் பெற்றதாய் கிண்ணம் பிச்சைக்கழுது பிரியமகன் கும்பகோணத்திலே கோதானஞ் செய்கின்றானாம்" என்னும் பழமொழிக்கு இலக்காவரேயாம். சமயநிலைதெரியாதார் செய்யுந் தருமம் என்னகாமம்!

நாம்இதுவரையுமெடுத்து வெளிப்படுத்திய உண்மை விஷயங்களை இனைகேற்ற காலத்திலே பெருஞ்செல்வ மொன்றை நம்பெற்றிராது நுவையொன்றை நோக்கி ஒதுக்கிவிடாது, இந்துசாதனபத்திராதிபர் முதலிய ஏனைய பத்திராதிபர்களுந் தத்தம் பத்திரிகைகளிலேயும் அனுவதித்து வெளிப்படுத்துவார்களேயாயின் அதுபெரும் பயனைத்தருமென்பதற்கு யாதுஞ் சந்தேகமில்லை. கல்வியறிவிலே சிறந்த அறிஞர்களாயுள்ளவர்களும் இவ்விஷயத்தைக் கவனித்து இவ்வுண்மைகளை ஏனையோர்களெல்லாம் எடுத்துப்போதித்து இப்பரமதருமத்தைநிறைவேற்றும்பொருட்டு உதவிபுரிய அவர்களை ஏவிப்பருகுமாறு முழுமுதற்கடவுளாகிய பெருமானது திருவருளைப் பிரார்த்தித்து இவ்விஷயத்தை இதனுடன் முடிக்கின்றேம்.

இங்ஙனம்:
நல்லூர் { ஸ. சரவணமுத்துப்பிள்ளை,
10-2-14 { உதயபாநு பத்திராதிபர்.

கர்ணாமிர்தம்.

(0)

ஐயர்—என்ன செய்யலாம்! இன்று சனிக்கிழமை. சனிப்பிணம் தனிப்போகாதாம். அச்சோடமாவரியுமாம். பிரேதமசோடு கோழிக் குஞ்சொன்று சேர்த்துக் கொண்டு போய்ச் சுடுகாட்டில் கழுத்தைத் திருகுவது வழக்கமாம். இதோ அம்பட்டனும் அப்படித்தான் சொல்லுகிறன் நாமோ பிராமணரா யிருக்கிறோம். கோழி திருகிப்பழக்கமுமில்லை எங்காலும் குருக்களே! இதற் கென்ன செய்வோம்?

குருக்கள்—ஓ! ஓ! அது கட்டாயமாகச் செய்யத்தான் வேணும்.

ஐயா—என்றால் குஞ்சு முரிக்கக் கைவராதாமே

கு—ஓப் எனக்கு நல்ல பழக்கம் நான் பார்த்துக் கொள்வேன் நீர் கோழியைப் பாடைக்குள் வையும்.

பிள்ளை—சீச்சீ! நீங்கள் பிராமணரா? உங்கள் காயத்திரி மந்திரமெல்லா மெங்கே? ஸ்ரீபஞ்சாட்சரம் எங்கே? ஏடேடாய்க் கட்டிவைத்திருக்கும் பிராயச்சித்த விதிகளெங்கே? மநுவார மரணப் பிராயச்சித்தம் தட்டுப்பட வில்லையா? ஏதோ அம்பட்டன் சொன்னதை உபதேசமாயொப்புக்கொண்டு இறீர்கள். உங்களை நாங்கள் குருவென்று கைபெய்வது எப்படி? என்காலும்கொலை செய்கிறீர்கள்.

ஐயா—அடசீ போ உன்னை ஒன்றும் கேட்கவில்லை நீ கையிடாது போனால் எங்களுக்கென்ன குறைந்தது? உங்களையர்மாரைத் திருத்திப் போட்டாயா? உங்கள் குருமூர்த்திகள் பத்திரிகாசமாய் நரியன் குண்டில் உருப்பாயன்மக்கள் விலை அந்தி சந்தி விழுந்து பணிந்து எழுகிறாரோ. அதை யென்ன செய்து விட்டீர் எங்களைத்தான் கண்டிராக்கும். போம போம்.

பிள்ளை—நமக்கென்ன சேணியரும் நக்கரும் பட்டதுபடு.

சார்—என்ன சட்டம்பியார் உங்களுக்கென்றவர் சஞ்சீவி யென்கள் சிரஞ்சீவிக்கும் நல்லமருந்தாய்ப் போயிற்று எங்கள்பாடு பருத்தி பிடைவையாய் காய்த்தாற் போலிருக்கிறதே.

சட்டம்பியார்—அதேன் சார் அப்படிச் சொல்லுகிறீர்கள்.

சார்—கோயிலில்லை, குளமில்லை, பூசையில்லை, பூச்சுமில்லை, சாதியில்லை, சமயமில்லை, எல்லாருஞ் சகோதரர் என்ற பைசாசபோதம் உபதேசித்து சித்தியார் சிவப்பிரகாச மெல்லாம் மூலையிலே தூக்கச் செய்தால் எங்கள் பாடுதானே வாய்ப்பு. இன்னும் நாலு மூன்று வருடத்திற்குள் எங்கள் மதத்தில் நன ஆடுகள் வந்து சேரும் அறுவடைக் காவியது போலக் கொண்டுவந்திருக்கிறீர்களே

சட்டம்பி—என்னவோ சைவ பரிபாலன சபையுமுண்டு சைவருண்டு நமக்கென்ன?

சார்—சாதியில்லை சகோதரரென்றால் அஞ்சனத்தாழ்வு நழுவினாலேன் தழுவக் கூடாது? குளிக்காமல் குளத்தைக் கலக்கிப் பருத்தக்கிறை கொடுத்து பாலக கூத்தோவிகளுக்கு விடலாமோ? லோக்கல்போட்டுக் கெரிவுக்கு வீடு வீடாயத் திரிந்து ஆளாளாய்த் தனித்தனி யோடி யோடி வேலை செய்த சைவர்கள் அந்தப் பரிபாலன சபையிற் சேருக்கு விலையாகும் உங்கே அந்தச்சபை இந்தச் சபையென்று சைவர்கள் கூடி என்ன செய்கிறார்கள்? நபூவிக சொன்னாலும் சைவக்குஞ்சு சனங்களா? பருத்துக் கொண்டு போகிறதே! மெசதத்வீ கலியாண வீடுகளில் தானமுங்கூட சபைகளுக்குக் கொடுக்கிறார்களே. சந்தையிலேயிருந்து நாசித்தத்தில் வெழுதவதுதானோ பரிபாலன சபையாரின் கடமை? சீ. போம் காணும் போம்.

இங்ஙனம்.
பஞ்சாமிர்தம்.

வண்ணை வைத்தீசர் ஒரு துறைக் கோவை உரை.

(:0:)

தடலை பேரகொண்டு வானோர் நிறைஞ்சுந் தனிப்பொருளின்—முடலை மேற்கொண்ட வண்ணை யன்னி நாமகள் வனத்தே—காடலை மேற்கொள் ளரிமாலை புகபிலர கண்டஞ்சியோ—காடலை மேற்கொண்ட யான்கரத்தட் காட்டிலொளித்ததுவே.

இ—ள்–தான் தலைமேற் கொண்டு வானோர் இறைஞ்சுந் தனிப்பொருள்—திருவடி மலர்களைத் தம்மின் சிரமேற் சூடி தேவர்கள் வணங்கும் ஒப்பற்ற பரம்பொருளாகிய வைத்தீசரப் பெருமானார் நின்று,- ஆடலை மேற்கொண்ட வண்ணை அனவீர்—அசைவறமுடை நின்ற திருச்சுத்தம் செய்தலால் முதன்மையைப் பெற்றுக் கொண்ட வண்ணைமாநகரத்தை ஒப்பாகவுள்ள பெண்ணே,- நும் அசல் வனத்தே—உமது அழகிய விசாலித்த சோலைவனத்திடமாக,- காடு தலைமேற்கொள் அரிமானை—காட்டிலே திரிதலை மிகுதியாக உள்ள இடையாகிய சிங்கத்தையும்,- உயிலைக் கண்டு அஞ்சியோ—தனமாகிய யானையையுங் கண்டு அஞ்சியோ—ஊடலை மேற்கொண்டமான்—இன்பத்தை கெடுவாகிய ஊடலே மிகுதியாகக் கொண்ட கண்களாகிய மான்,- காந்தள் காட்டில் ஒளித்தது—கைகளாகிய செங்காந்தள் மலர்க்காட்டிலுள் மறைந்தது.

ஏகாரங்கள் இரண்டும் அசை, ஓகாரம் விகுதியோடு வியப்பு ஆடலை உருபு மயக்கம் அரி பிமேதிராதி தேவர்கள் தங்கள் குறைகளை முடித்தற் பொருட்டுத் திருவடிகளை சிரமேற் சூடி வணங்குதற் குரிய முதல்வர் வைத்தீசரப் பெருமான் ஒருவரே என்பார், தாடலை மேற் கொண்டு வானோரிறைஞ்சுந் தனிப்பொருள் என்றும், அப்பெருமானார் நின்று நிருத்தஞ் செய்ததால் மற்றைய நகரங்களிலும் உயர்ச்சியைத் தன்னிடத்துக் கொண்ட வண்ணை யென்பார் நின்றுடலை மேற்கொண்ட வண்ணை எனவுங் கூறினர். வண்ணைமாநகரத்தை ஒப்பான தலைவியினத்தை அடவியென உருவகப்படுத்தி உரைத்தற் கேற்ப இடையைச் சிங்கமாகவும் தனங்களை யானையாகவும், கண்களை மான்களாகவும் அக்கண்களை மறைத்த கைகளைக் காந்தட் காடாகவும் உருவகப்படுத்தி உரைத்தார். தாடலைமேற்கொண் டென்பதற்கு வணங்குதலை மேற் கொண்டென்றும் பாதம்முதல் திருமுடியளவு முள்ள உருவத்திருமேனியாகத் தரிசித்தென்றும் உரைப்பினுமாம். இச்செய்யுள் இயைபுருவகாலங்காரம், தலைவிகண் புதைத்தலைத் தலைவன் இயைபுருவகத்தாற் புலப்படுத்திக் கூறினு னென்பது கருத்து. (க)

இங்ஙனம்.
தி. கிருஷ்ணபிள்ளை உபாத்தியாயர்.

விளம்பரங்கள்.

அசாதிரோகங்களுக்கும் பிரதிக்ஷ ஔவுஷதம்.

கஸ்தூரித் திராவகம்

இத்தத்திராவகத்தில் ஒருரோகத்துக்கு மூன்று சொட்டுவீதம்ஒருஒயின்கிளாஸ் தண்ணீரில்விட்டு காலை, மாலை இரவுபடுக்கும்நேரம் சாப்பிட்டால் எப்பேர்ப்பட்ட சீதழிவினால் தாங்கமுடியாத வருத்தத்தை மூன்றுநாளையில் சுகமாக்கும். சல நாள் மருந்துசாப்பிட்டால் வியாதிநன்றாய்ச் சொஸ்தமாகும். தருணவயசுடையவர்களுக்கு இதுமிகவும் சேர்த்தியானதிராவகம். இதன்விலை அவுன்சுக்கு ரூபா 10. இதற்குக்குறைந்த அனுப்பப்படமாட்டாது. தபாற்செலவு பிரத்தியேகம்

நுஜஜிபங்க தைலம்

இதன்சிறந்தகுணத்தை இங்குவிரிப்பின் மிகையாகுமாதலால் என்னிடத்தில் நேரிலாவது கடிதமூலமாயாவது விபரமறிந்துகொள்ளவும். ஒரு அவுன்ச தைலத்தின் விலை ரூபா ௨. தபாற்செலவுபிரத்தியேகம்.

வீரியவஸ்தம்பனக் குளிகை.

ஆச்சரியம்! மிக்க ஆச்சரியம்!! ரோகமற்றவர்களுக்கு ஒருகுளி கைவில்தெரியும். இதைப்பற்றி அதிகமாகச் சொல்லத்தேவையில்லை. ௨ குளிகைக்குக்குறைய அனுப்பப்படமாட்டா, பரீட்சித்தவர்களே இதன்சுகத்தை அநுபவிப்பார்கள். ௪0 குளிகையின்விலை ரூபா ௨. தபாற்செலவு அணு ௪. இதன்குணத்தையும் என்னிடத்தில் காய்தமூலமாயாவது நேரிலாவது விபரமறிந்துகொள்ளவும்.

—கெங்காதரதைலம்— கண்டமாய்வுக்குக் கைகண்ட உண்மையான மருந்து இதன்விலை ஒரு அவுன்சுக்கு ரூபா ௫.

—மகாநாராயண தைலம்—வாய்வுகள் சுபாஷபிணிசம் முதலானதுக்கு கைகண்டது. ஒருஅவுன்சுக்கு ரூபா ௧. மேற்கண்ட மருந்துகளுக்குத் தபாற்செலவு பிரத்தியேகம்.

காமவிலாசலேகியம் அல்லது சர்வாமிஸ்ரிலேகியம்.

இந்தலேகியத்தை யான அநேகவிரபுக்களுக்குச்செய்துகொடுத்த பலவியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள்மனமகிழ்ந்து வெகுமதிகளையுங்கொடுத்திருக்கிறார்கள். இதைநான் விளம்பரத்தில் லோக நன்மைக்காக பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள்மாத்திரமல்ல ஏழைகளும் இதனால் உண்டாகும் நன்மை சுகம் முதலியவைகளை அடையும்படி பொதுஜனங்களின்சௌகரியத்துக்கு இப்பொழுதே இந்த லேகியத்தைப்பற்றி பிரசுரித்துவருகிறேன்.

இது சாலாமிஸ்ரி குங்குமப்பூ கோரோசித் கஸ்தூரி ருமான்தகா பீதாறு சாலாமுஸ்லி சப்பேதமுஸலி பிஸ்தாஸ் சாரப்பருப்பு பாதம்பருப்புசாதாவாரி சீரமுன்ஸிவிதைசாதப்பூ லவங்கபத்திரி அபரகஸ்பம் பவளபஸ்பம் வெள்ளிபஸ்பம் அபரகத்தஞ்செந்தூரம் சாம்பிராணிப்புல் இன்னுமனேக புஷ்டியான மூலிகைகள் சேர்த்துச்செய்யப்பட்டிருக்கிறது. இதனால் நீரழிவு வெள்ளை நீரமாவு கண்ணெரிப்பு நரைத்ததுபோல வெள்ளையாய்ப்போகுதல் நீர்க்கடுப்பு நீரடைப்பு மூலச்சூடு ஒருவருஷத்தின் உண்டாயிருக்கும் அண்டவாய்வு இருமல் காசம் பித்தசாமாலை பித்தபாண்டு பிணிசம் கைகால் காந்தலி இடுப்புவலி பக்கவாய்வு சூலவாய்வு இன்னும் அனேககொடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிடுவதால் சூதகவாய்வு பிரசவ அறையில் உண்டாகும் பலநோய்கள் தீர்ந்து தேக புஷ்டியையும் பலத்தையும் தருவதுமல்லாமல் விர்த்திசெய்யும்.

சில ருசுகள் லேகியங்களால் சகலரோயுந் தீர்த்து 20 வயதுள்ள முதியோரை யௌவனர்களாக்குமென்றும் சந்தான மில்லாதவர்களுக்குச் சந்ததியுண்டாமென்றும் பலவாறு விளம்பரங்களைப் பிரசுரித்திருக்கிறார்கள். அவ்விதம்பிரதாபவும் பொய்சொல்லவும் என்மனச்சாட்சி எனக்கு இடங்கொடுக்கிறதில்லை. ஆனால் கர்ப்பர்த்திப்பதற்குத்தகுந்த அவிஷதம் என்னிடமுண்டு. இவ்வுடன் ஆதியோடந்தமாய் அப்பேர்ப்பட்ட ஸ்திரிகளின் தேகக்குணத்தை தெரிவித்து ஔஷதத்திற்கு வேண்டிய பணமுஞ் செலவழிப்பார்களாயில் நான் ஔஷதப்பிரயோகஞ் செய்யக்கூடும். இதைப்புருஷர்கள் பெரிய களாச்சிக்காய்ப்பிரமாணமும் ஸ்திரீகள் சிறியகளாச்சிக்காய்ப்பிரமாணமும் புதிய வியாதிகளுக்கு ௧ நாளும் பழையவியாதிகளுக்கு ௪௨-நாளும் அந்தந்தவியாதிகளுக்கு மருந்து எடுக்கப்படும்போது நம்மால் தெரிவிக்கப்படும் மனுபானத்துடன் சாப்பிடவேண்டும். விலை இருத்தலொன்றுக்கு ரூபா ௨0கால் ருத்தலுக்குக்குறைத்து அனுப்பப்படமாட்டாது. புருஷர்களுக்கு ௪0 நாளைக்கு ஒரு ருத்தல்போதுமானது. ஸ்திரீகட்கு முக்கால் ருத்தல் இதுசாப்பிடுவதற்கு வெகு இன்பமும் குணமுமாயிருக்கும். இதில்யாதொரு பேதமுமடையாது. எடுக்க இஷ்டமுள்ளவர்கள் வியாதியின்விபரத்தைக் கடிதமூலமாய்த் தெரிவித்து அத்துடன் அ அணு ஸ்டாம்பும் அனுப்பவேண்டியது. அல்லாவிட்டால் லேகியம் அனுப்பப்படமாட்டாது.

மிருத்துஞ்சீவன அல்லது கஸ்தூரி மாத்திரை.

எட்டுவிதமான சுரத்திற்கும் அசுத்தசலத்தினால் கொசுகு முதலான விஷசெந்துக்களினுலுண்டாகும் மலேரியா ஆகிய விஷக்காய்ச்சலுக்கும் பலவிதமான சன்னிக்கும் இதில் ஒரு மாத்திரையை இஞ்சிச்சாற்றி லுரைத்துச் சாப்பிட்டால் எப்பேர்ப்பட்டசன்னியும் ஒருஅல்லது இருவேளை மருந்திற்ககப்படும். ஏழுவேளை சாப்பிட்டால் சன்னி காச்சல் காசம் முதலியன சுத்தமாய் சுகமாகும் ௧௨-குளிகையின் விலை ரூபா ௨.

காமனீமது பஞ்சனீ மாத்திரை.

இதுதங்கம் அப்ரகபஸ்பம் கஸ்தூரி குங்குமப்பூ லிங்கசெந்தூரம் முதலியவிலையுயர்ந்தமருந்துகள் சேர்த்துச்செய்யப்பட்டுத் தயாராயிருக்கிறது. இதன்சொற்பகுணத்தை மட்டுங்காட்டுகிறேன். நீரழிவு காசம்.இருமல் ஈளைதீராதவாதரோகம்பிரமேகம்மூலச்சூடு புதிதாய்க்காணும்வெண்—வாத—வெள்ளை முதலியவியாதிகள்தீர்ந்து தாதுபுஷ்டியுண்டாகும் மூன்றுநாளில் கல்லுருகும் செரியும்௪௪ நாளில் வியாதி பூரணசுகமாகும். காலைமாலை ௪௪—நாட் சாப்பிடக்கூடிய ௮௮-மாத்திரைகளின் விலை ரூபா ௫. ௪௪-நாள் சாப்பிடக்கூடிய ௮௮-மாத்திரைகள் ரூபா ௧௰-க்குக் கொடுக்கப்படும். தபாற்செலவு பிரத்தியேகம்.

சந்திரிகா பிரதம மாத்திரை.

இந்தமாத்திரை காசம் பவுத்திரம் அண்டவாய்வு பக்கவாய்வு பித்தபாண்டு வெள்ளை நீர்க்கடுப்பு நீரடைப்பு பிளசைபாலம் தாய்ஸ்திரீ சுவாசத்தால் கோய்களை யெல்லாம் தீர்க்கும் இம்மாத்திரையானது ௧௨-நாள் சாப்பிட்டால் பூரணசுகமுண்டாகும். மருந்தெடுக்கும்போது வியாதிக்கேற்ற அநுபானம் தெரிவிப்போம். ௪௪-குளிகையின் விலை ரூபா மூன்றுஅரை.

புத்தகங்கள்.

பின்னால் காட்டப்படும் அருமையான புத்தகங்கள் மாவுடன் ஒருவராயும் இதுவரை கண்வைகளுக்கு இ அனைகளுக்கு கைப்பற்றிக்கொள்ளக்கடமை வியுக்தால ஒவ்வொருவர்களுக்கும் குருவைப்போல் போதிக்கக்கூடிய மெத்த அருமையான புத்தகங்களானதால ஒவ்வொருவரும் இவைகளைக்கட்டாயம் வாங்கி வாசிக்கவேண்டியது.

௧ கோகசாஸ்திரம் மாயின்கட்டு ஒருபிரதி ரூபா ௩.
௨ ,, சலிக்கோசகட்டு ,, ௪.
௩ ஸைகத்தொழிற்போதினி மாயின்கட்டு கலி. சலிக்கோ ,, ரூபா ௩.
௪. பூர்வாசௌதுத்தோபகாரி வாணவேடிக்கைகளடங்கிய பதார்த்தசந்திரிகை ஒன்று அணு ௪0.
௫ அதிசய இந்திரஜாலவித்தை சாமான்ய டைகய ஒன்பதாசு சந்திரிகை ஒன்றுக்கு அணு ௧௨.
௬ சோகனவல் சரித்திரமொன்றுக்கு அணு அ
௭ பேய்பிடிப்பு சாய்வு சரித்திரம் அணு ௧௨.
௮ மேற்படிசரித்திரமும சோகனவாலசரித்திரமும் ஒரேகட்டிடமொன்றுக்கு அணு ௨0.
௯ ரூபியா மாபாவியயுத்தம்இருபகுதிகள் ரூ ௩.
௧0 ரசமணி செய்யும்புத்தகம் (அபகம) ரூ ௧௰.

மேற்காட்டிய புத்தகங்கள் வேண்டுவோர்களுக்குத் தாமதமின்றி அஞ்சல்வழியாயோடு அனுப்பப்படும் தபாலைக வேண்டுவோர்களுக்குத் தபாற்செலவு பிரத்தியேகம். மற்றவிபரங்கட்கு கார்ட்லாக்கை எழுதி விபரம் அறிந்துக்கொள்ளவும். இதுபோல அனுப்பலாம் ஒரு முறை ருபீயா ருக்கா வாங்கித் தனமுமமகிழ்வை படையுங்கள்.

வைதஷிகாசம
மகாராஜ கெங்காபிரசாத் பண்டிதர்
மருந்தாலை முதலாம் டிவிசன நம்பர்-98
கொழும்பு.

உலகப் பிரசித்தி பெற்ற
ப்ரோபெஸர் ஜேமஸ் என்பவரின்
"எலக்ட்ரோ டனிக்"

காமகேசரி மாத்திரைகள்.

(:*:)

நரம்புவியாதிக் கூட்டங்கள், அங்கமின்மை, ஞாபகசக்திக்குறைவு முதலியவைகளைப் பேக்கி சரபுதைப் பலபடுத்தித் தேகக்கட்ட உறுதிப்படுத்தச் சரீரத்தைப் போஷித்து வரும், அசாத்தியமான வியாதிகளை விலக்கி தழ்ந்துபோன புருஷத்தவத்தைத் திருப்பி இரத்த சுத்தி செய்து மலக் கட்டைத் தீர்க்கும். இந்த மாத்திரைகள் நரம்புகளுக்கு புஷ்டிகொடுத்து இரத்தத்தை விருத்தி செய்யக்கூடிய டனிக் மருந்தேயாகும், இதை உபயோகிப்பதால் மனோற்சாகமும் தெளிந்த பார்வையும் முகக்களையு முண்டாகுமென்பது திண்ணம்-



மிக அருமையான அற்புத ஜீவாதார சரக்குகள் சேர்ந்த இம்மாத்திரைகள் உத்தியோகஸ்தர்களும், மாணாக்கர்களும், உபாத்தியாயர்களும் மதபிரசங்கிகளும், வாயர்களும் உபயோகித்துவர அவசியமான மருந்தா யிருக்கும்

இம்மாத்திரைகளை விலக்கு வாங்கும்போது ஜாக்கிரதையா யிருக்க வேண்டும், ஏனெனில் அநேகர் இம்மாதிரியே மாத்திரைகள் செய்து ஜனங்களை மோசஞ்செய்கிறார்கள். ஆகையால் சரிதவந்திட மடைவதற்கு காரணமாகும் இதுதனகாக வாங்கும் போது PROF JVMES. ELECTRO-TONIC PEVRLS பு. ஜேமஸ் எலக்ட்ரோடானிக் பெரலஸ் (பு. ஜேமஸ் விசயுத்சக்தி மாத்திரைகள்) என்னும் எழுத்துக்களைச் சரியாய்ப் பார்த்து வாங்கவேண்டும்.

விலை ரூபா சதம
௨௰-மாத்திரை கொண்ட ஒருசீசா ௧—௩0
௪0—மாத்திரை கொண்ட ஒருசீசா ௨—௨௫,

உபயோகிக்கும் விதம்:—ஒரு மாத்திரையை பாலோடாவது நீரோடாவது சாப்பிட்ட பிறகு நினைத்தித் திரை கொண்ட உட்கொள்ள வேண்டும் மெல்லக்கூடாது. வி, பி, சார்ஜ் மூன்று சீசாக்கள் வரையில் அணு ௪ அதிகம்

சோல் ஏஜண்ட்:
T. D மதுரநாயகம் அன் கோ.
ஞானசுந்தரவைத்தியசாலை
58, செட்டித்தெரு,
கொழும்பு.

பரிசுத்தமான தேன்.

நாடுகளிலிருந்து ஸ்பெஷலாய் எங்களால் நியமிக்கப்பட்ட வேலைக்காரர்களால் சேகரிக்கப்பட்டது. கடைகளில விற்கும் வெல்லப்பாகை கலந்த தண்ணீர் போன்ற தே னல்ல இத்தேன் மிகவும் தடிப்பாகவும், திக்காகவும், சுத்தமாகவும் இருக்கும். கலப்பில்லாத அப்பட்டமான சரக்கு. மேலும் வைத்திய சாஸ்திர முறைப்படிக்கு 'எக்ககளால் சுத்தியும் செய்யப்பட்டு விற்கப்படுகிறது கடைகளில விற்கும் தேன் ஒருசேர்சேர்க்குமிடத்தால் நம்மால விற்கப்படும் தேன் ௩ தளிகள் உபயோகித்தால் போதுமானது. இப் படிப்பட்ட மேலானவும், சுத்தமானவும், சுயமானவும் சரக்கு கிடைப்ப தரிது. மருந்துகளை இத் தேனுடனே அனுபானித்து உட்கொண்டால் மருந்துகளின் வீரியமும், குணமும் அதிகரிக்கச்செய்யும்.

விலை டின் ௧-க்கு அணு ௧௨. ஒன்று அல்லது இரண்டுடின்கள் வரையில் அனுப்ப வி. பி செலவு அணு ௫ பிரத்தியேகம்.

பி. சுப்பராய்,
ஆயுர்வேத அவுஷதசாலை,
தஞ்சாவூர்.

தயவுசெய்து,

இதை தங்கள் சிநேகிதர்களுக்கு

வாசிக்கக்காண்பியுங்கள்.

P. சுப்ராயின்

அபூர்வ

ஆயுர்வேதஔஷதங்கள்

௧0. உயர்ந்த கஸ்தூரி—மிகவும் சேர்த்தியானது, முதல்தரமானது, காஷ்மீர்தேசத்திலிருந்து நேராக வரவழைத்த, கஸ்தூரி: நம்மிடத்தில் எப்பொழுதும் கிடைக்கும். தோலா ௧-க்கு ரூபா ௪௮, வி. பி செலவு பிரத்தியேகமாகும்.

௧௧. தேன் கொட்டின் மருந்து—இம்மருந்தை விஷம் தீண்டிய இடத்தில் தடவினால், தக்ஷணமே வலிமிறங்கி, வருந்தப்பட்டு, சகிக்கமுடியாத வேதனையல் தீர்று, நீங்கி, யாவரும் ஆச்சரியப்படத்தக்க விதமாய். ஆனந்தசுகம்படியான அனுகூலத்தைத் தரும். கிரயம் சீசா ௧-க்கு அணு ௪, இந்தியாவிலும் பர்மாவிலும் ௧ முதல் ௧௨ சீசாக்கள் வரையிலும் வி. பி. செலவு அணு ௫ பிரத்தியேகம்.

முக்கிய குறிப்பு:—ஒரே தடவையில் ௧௨ சீசா தேன்கொட்டின் மருந்துக்குக் குறையாமல் வாங்குவோர்க்கு டஜன் ௧-க்கு ௩-௮-0 வீதம் கொடுக்கப்படும். வி. பி. செலவு அணு ௫ பிரத்தியேகம் "இக்குறிப்பு" தேன்மருந்துக்கே யன்றி மற்றமருந்திற்கும் சம்மதிக்கப்படமாட்டாது.

௧௨. மேகரண மருந்து—இதை வெள்ளைத் துணியில்தடவி ரணங்களின்மேல்போட அரையாப்பு, கண்டமாலை, விப்புருதி, தொடைவாழை, செவ்வாப்பு, ஆசனப்பவுத்திரம், அழுகுனியன், பிளவை, இரத்தமேகவெடிப்பு, இவிகைப்புற்று, யோனிப்புற்று முதலிய இரணங்களை மாறி சொஸ்தமாகும். விலை சீசா ௧-க்கு அணு அ. இந்தியாவிலும், பர்மாவிலும் ௧ முதல் ௩ சீசாக்கள்வரையில் வி. பி. செலவு அணு ௫ பிரத்தியேகம்.

௧௩, கண்டசுத்தி மாத்திரைகள்—டைரெக்ஷனில் சொல்லியபடி, இதைச்சாப்பிட்டுவந்தால் தொண்டைகட்டு, தொண்டைகம்முதல், நீங்குவதும் அன்றி, இன்பமாய்ப் பாடுவதற்கு இசைத்த குரலைத்தரும் சங்கீத வித்துவான்களுக்கும், பிரசங்கம் செய்பவர்களுக்கும், உபாத்தியாயர்களுக்கும் இது ஓர் அருமையான ஔஷதம். எவ்வளவு நேரம் பாடினாலும், பிரசங்கித்தாலும், குரல் கம்மாது, இனிமையான ஓசையைத் தரும். கிரயம் சீசா ௧-க்கு அணு அ, இந்தியாவிலும், பர்மாவிலும் ௧ முதல் ௩ சீசாக்கள்வரையில பாக்கிங்கு தபால் முதலிய செலவுகள் அணு ௫ பிரத்தியேகம.

௧௪. சுகந்த ஸ்நானப்பொடி—இந்த வாசனைப்பொடியை தினந்தோறும் தேகத்தில்த்தேய்த்து ஸ்நானம்செய்துவந்தால் தேகத்திற்கு சுகந்த பரிமளத்தைத்தந்து, தேமல், அரிப்பு, சொறிசிரங்கு, கற்றாளைநாற்றம், அக்கிலெரிச்சல், மேகதாங்கை, சரீரவரட்சி, கணைச்சூடு, வெடிப்பு, கரப்பான், தலைவலி, பொரிமேகம், படர்தாமரை, மேகவூரல், இரத்தி முதலிய இன்னு மநேகவித தேஹோபத்திரவ வியாதிகள் நீரும். நல்ல வாசனையும், காந்தியும், லக்ஷ்மிகரமும், ஆரோக்கியமு முண்டாகும். அறைக்குழந்தைகள் முதல் யாவரும் உபயோகிக்கலாம். டப்பா ௧-க்கு விலை அணு அ, வி. பி. செலவு அணு ௫ பிரத்தியேகம்.

௨0. சஞ்சீவி மாத்திரைகள்—இம் மாத்திரைகளினால் தலைவலி, தலைபாரம், சளி, இருமல், சுரம், மயக்கம், வாந்தி, விஷசுரம், இசிவு, வயிற்றுப்பிசம், வயிற்றுவலி, தெற்குதிகணை முதலிய நோய்கள் தீரும். அறைக்குழந்தைகள் முதல் யாவரும் உபயோகிக்கலாம். விலை சீசா ௧-க்கு அணு ௧0, இந்தியாவிலும், பர்மாவிலும், ௧ முதல் ௩ சீசாக்கள்வரையி லனுப்ப வி. பி. முதலியசெலவுகள் அணு ௫ பிரத்தியேகம்.

௨௧. கோரோஜனை மாத்திரைகள்—இம் மாத்திரையினால் இருமல், சளி, சுரம், வயிற்றுப்பிசம், ஜலதோஷம், இளைப்பு, வலி, மயக்கம், தெற்குத்திக்கணை, ஜன்னி, வயிற்றுப்போக்கு, தோஷம், மூக்குமாந்தம், வாதகணம், செவ்வாப்பு, கிரிவாண், கரப்பான், பாலமாந்தம் முதலிய எல்லா மந்தங்களும், சுரஜ்வரங்கி, செங்கிரந்தி, மலஜலக்கட்டு முதலியதுகளும், மலசுரம், முறைசுரம் முதலான பலவித சுரங்களும் அடியோடு நீக்கும். சீசா ௧-க்கு விலை அணு ௧0, ௧ முதல் ௩ சீசாக்கள் வரையில் வி. பி. செலவு அணு ௫ பிரத்தியேகம்.

௨௨. கரப்பானுக்கும் சொறி சிரங்குக்கும் மருந்து—இம்மருந்தை டைரக்ஷனில் சொல்லியபடி மேலுக்குமட்டும் உபயோகித்துவந்தால் வெகு சீக்கிரத்தில் எவ்வித கணைச்சல்களும், சொறிசிரங்கு, வரட்சொறி, அநேக குழந்தைகளுக்கு தேகமெங்கும் அல்லது சில பாகங்களில் காணும் அதிக மயைச்சலையும், தொந்திறவையும் தருகின்ற எவ்வித கரப்பான்களையும், வெகு சீக்கிரத்தில் ஆற்றிவிடும். விலை சீசா ௧-க்கு அணு அ. இந்தியாவிலும், பர்மாவிலும் அனுப்ப வி. பி. செலவு ௧ அல்லது ௨ சீசாக்கள்வரையில் அணு ௫ பிரத்தியேகம்.

௨௩. கேசவர்த்தனி—உசிதமான வாசனைச்சாமான்கள் சேர்த்து செய்யப்பட்ட இந்தைலத்தால் கூந்தல் செழிப்பாகவும், நெருக்கமாகவும், கறுப்பாகவும் வளரும், கண்கள் குளிரும், தலைநோய்போகும். மூளையைப் பலப்படுத்தும், மிகவும் வாசனையுள்ள தைலம். சீசா ௧-க்கு ரூபா ௧, வி. பி. செலவு ௧ அல்லது ௨ சீசாக்கள்வரையில் அணு ௫ பிரத்தியேகம்.

௨௪. இரசகிருதம்—சாஸ்திரக்கரமாகச் சார்ந்த அநேக அபூர்வ மூலிகைகளால் செய்யப்பட்ட இச்சூரணம். காபி, டீயிலைகளுக்குப் பதிலாக உபயோகப்படுத்தக்கதாக்கி தயார் செய்யப்பட்டிருக்கிறது. காபி, டீயிலைகளுள்ள துர்க்குணங்கள் இதற் கில்லை காபிப்பொடியை எவ்விதம் உபயோகிக்கிறோமோ அவ்விதமாகவே இதையும் உபயோகிக்க மிகவும் ருசியான பானமாகும் அறைக்குழந்தை முதல், விருத்தாப்பியர்கள்வரையில் எல்லோரும் உபயோகிக்கலாம் சுரம், ஜன்னி, சர்ப்பம், பிரசவம், சர்வரு முதலிய கஷ்டகாலங்களை சூரணத்தின் கஷாயத்தை பாலுடன் அல்லது பாலைச் சேர்க்காமல், சமயத்திற்குத் தக்கபடி உபயோகிக்க, ஜனங்களை தேய்சனி விகாரத்தை குணப்படுத்துவது அல்லாமல், சோர்வு வராமல் காக்கிறது. பித்தவாயு, காசம், சுவாசம், அஜீரணம், மலச்சிக்கல், தலைவலி முதலியவைகளைப் போக்கும். இரத்தத்தைச் சுத்திசெய்து, சுகவிருத்தியையும், தேக ஆரோக்கியத்தையும் தரும் அக்கினிமாந்த முளைகாசநோய், மதுமூத்திரம், தந்துமூத்திர ரோகங்களுக்கும், அருமையான மருந்து. இதை வழக்கமாய் உபயோகித்துவந்தால் மதுமூத்திர ரோகிகளின் நீரிலுள்ள சர்க்கரையும், நீரின் அளவையும் குறைத்து மூத்திரரோகங்களை அடியோடு குணமாக்கும். சேகரத்திற்கு சுகந்தி செய்யும். மூளையைப் பலப்படுத்தி ஞாபகசக்தியை அதிகப்படுத்தும் மாணாக்கர்கள், வக்கீல்கள், உத்தியோகஸ்தர்கள் யாவருக்கும் குணமுள்ள காபி. டீயிலையை விட்டுவிட்டு, இதை உபயோகிக்க அருமையான சூரணம். டப்பா ௧-க்கு விலை அணு ௩. வி. பி. செலவு அணு ௫ பிரத்தியேகம்.

௨௫. சர்பத்துக்கள்—நாரத்தைப்பழம், நன்னாரிவேர், ரோஜா, வாழைப்பழம், எலுமிச்சம்பழம், மாதுளம்பழம், சேவிப்பழம், திராக்ஷை, அன்னாசிப்பழம், தூதுவளைப்பழம், கொம்மட்டிப்பழம், சீமை இலந்தைப்பழம், தமரத்தம்பழம், நிலவேம்பு, சந்தனம், மாம்பழம், சர்பத்துக்கள். புஷ்பங்களின் சத்துக்களால் செய்யப்பட்டிருக்கின்றன. இவ் வொன்றையும் தனியாக உபயோகிக்க வேண்டும். ஒரு சேர் குளிர்ந்த ஜலத்திலாவது, சோடாவாட்டரிலாவது, கலந்து ஒரு அவுன்ஸ் சேர்த்தால மிகவும் இனிப்பாகவும், எந்த பழ சர்பத்து உபயோகிக்கப்பட்டதோ, அந்தப் பழத்தின் மதுரமான வாசனையோடு கூடிய சர்பத்தாகும். அரை அவுன்ஸ் சீசாக்களில் விற்கப்படும். இச்சிறு சீசாவிலுள்ள சர்பத்து ௫0 சேர் குளிர்ந்த ஜலத்துடனாவது, சோடாவாட்டராவது சேர்த்தால ௫0 சேர் உசிதமான சர்பத்தாகும். அரை அவுன்சுள்ள சீசா ௧-க்கு அணு அ. வி. பி. செலவுகள் ௧ முதல் ௩ சீசாக்கள்வரையில அணு ௫ பிரத்தியேகம்.

(குறிப்பு) நீங்கள் இடங்களில் மலையாளம் தெலுங்கு, கன்னடம் முதலிய பாஷைகள் தெரியாததால் ஆர்டர் செய்கிறவர்கள் தயவு செய்து தமிழிலாவது இங்கிலீஷிலாவது அடியிற்குறித்த விலாசத்திற்கு விவரமாகவும் தெளிவாகவும் எழுதிப் பெற்றுக் கொள்ளக் கோருகிறேன்.

P. சுப்ராய்
ஆயுர்வேத அவுஷதசாலை,
ஸ்ரீவெங்கடேசபெருமாள்
கோவில் சன்னதி.
தஞ்சாவூர்.

ஆறிரு தடந்தோள்வாழ்க அறுமுகம் வாழ்கவெற்பைக் கூறுசெய்தனிவேல்வாழ்க குக்குடம்வாழ்கச்செவ்வேள் ஏறியமஞ்ஞைவாழ்கயானைதன்னணங்குவாழ்க, மாறிலாவள்ளிவாழ்க வாழ்கசீரடியரெல்லாம்,

---

☞ Printed and published by M. S. Manicam pillai for the proprietorat the Sree ValaMpohyvilasa press Jaffna,